C 8108550

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

1. District : சிவகங்கை மாவட்டம் — PS: VEAG, SVG காவல்நிலையம் — Year: 2022 ஆண்டு — FIR No.: 01/2022 மு.த.அ. எண் — Date: 17.05.2022 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption — Sections பிரிவுகள்: 7 of PC Act 1988
(ii) Act சட்டம்: Act — Sections பிரிவுகள்: (as amended in) Act 16 of
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 10.05.2022 — Date to : நாள் வரை
Time Period : நேர அளவு 16.00 hrs — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.05.2022 — Time : நேரம் 08.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL I — Time : நேரம் 09.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் கிழக்கு 70 கி.மீ தொலைவு
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி கண்ணங்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் சிவகங்கை மாவட்டம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் சுப்பிரமணியன் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் காசியப்பன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் [illegible] ஊராட்சி மன்ற தலைவர் — (g) Address : முகவரி 33A, [illegible] 5வது வார்டு, தேவகோட்டை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. [illegible], உதவிப் பொறியாளர், கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியம் சிவகங்கை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்து சமர்பிக்கிறேன்:-** இன்று 17.05.2022 ஆம் தேதி காலை 08..00 மணிக்கு காவல் ஆய்வாளர் மு.குமாரவேல் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது, கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியம், தேரளப்பூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு.சுப்பிரமணியன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சுமத்தப்பட்ட சிவகங்கை மாவட்டம், கண்ணங்குடி ஊராட்சி ஒன்றிய அலுவகத்தில், உதவி பொறியாளராக பணிபுரியும் திரு.திருமாறன் என்பவர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு, அவரின் நடத்தைகளை அறிந்தும், புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்து, பின் அன்னாரின் அனுமதி பெற்று 17.05.2022 ஆம் தேதி 09.00 மணிக்கு, சிவகங்கை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.01/2022, U/s 7 of Prevention of

**(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)**

13.. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K.சுப்பிரமணியன் 17.5.22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
17.05.2022 at 11:30h

Name: பெயர் ....மு.குமாரவேல்....
Rank: நிலை ....காவல் ஆய்வாளர்.... No. எண் ..........
17.05.2022.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

Corruption Act 1988 (as amended in) Act 16 of 2018-ன்படி வழக்குப் பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- **அனுப்புனர்:-** சுப்பிரமணியன், S/o.காளியப்பன், ஊராட்சி மன்ற தலைவர் தேரளப்பூர், **வீட்டு முகவரி:-** 33A, திருகப்பூரார் தெரு, 5-வது வார்டு, தேவகோட்டை, தேவகோட்டை தாலுகா, சிவகங்கை மாவட்டம். **பெறுநர்,** காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, சிவகங்கை. அய்யா, நான் சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை தாலுகா, தேவகோட்டை நகர், 5-வது வார்டு, திருகப்பூரார் தெரு, கதவு எண்.33A-ல் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். தற்போது நான் தேரளப்பூர் ஊராட்சி மன்ற தலைவராக பதவி வகித்து வருகிறேன். 2019-2020 ஆம் ஆண்டு 14-வது நிதிக்குழு மானிய 2-வது தவணைத் தொகையின் கீழ் சாலைப்பணியினை தேரளப்பூர் கிராம பஞ்சாயத்திற்குட்பட்ட சுண்டமங்கலம் சாலை முதல் தேரளப்பூர் வரை சுமார் 1கிலோ மீட்டர் தூரத்துக்கு ரூ.13,56,000/- மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி கோரி ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, ஊராட்சி மன்ற தீர்மான நகலை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), கண்ணங்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலருக்கு ஊராட்சி மன்ற அலுவலகத்தின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் தேரளப்பூர் பஞ்சாயத்திற்குட்பட்ட சுண்டமங்கலம் சாலை முதல் தேரளப்பூர் வரை 1 கிலோ மீட்டர் தூரம் சாலை அமைக்க கண்ணங்குடி வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்கள் சமர்பித்த கருத்துருவின் அடிப்படையில் தற்போதைய மாவட்ட ஆட்சித் தலைவர் / ஊராட்சிகளின் ஆய்வாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.அ3/533/2019, நாள் 23.03.2022-ன்படி தேரளப்பூர் ஊராட்சி மன்ற தலைவராகிய எனக்கு மேற்கண்ட பணியினை செய்ய நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டது. அதன் அடிப்படையில், மேற்கண்ட பணியினை விரைந்து முடிக்க வேண்டி கண்ணங்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் உதவி பொறியாளர் திரு.திருமாறன் அவர்களை கடந்த மாதம் ஒரு நாள் நேரில் போய் அவரின் அலுவலகத்தில் சந்தித்து, மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டு அறிக்கை தயார் செய்து விரைவில் வழங்க வேண்டி கேட்டேன். அதற்கு அவர் என்னிடம், மதிப்பீட்டு அறிக்கை தயார் செய்து தொழில்நுட்ப அனுமதி பெற்றுத்தரவேண்டும்னா எனக்குத் தனியாக ரூபாய் 14,000/- தரவேண்டும் என்று சொல்லிக் கேட்டார். அவரிடம் நான் சில நாட்கள் கழித்து தங்களை சந்திப்பதாகச் சொல்லிவிட்டு

அங்கிருந்து வந்துவிட்டேன். மீண்டும் நான் கடந்த 10.05.2022 ஆம் தேதியன்று மாலை சுமார் 4.00 மணியளவில் அவரின் அதே அலுவலகத்திற்குச் சென்று, நேரில் அவரைப் பார்த்து மேற்படி பணிக்கான மதிப்பீட்டு அறிக்கை பற்றி அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் ஏற்கனவே நான் கேட்டபடி ரூபாய் 14,000/- பணத்தைக் கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை, கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் சார் என்று அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் என்னிடம், அதில் பாதி 7,000 ரூபாய் பணத்தையாவது கொடுங்கள் என்று கேட்டார். அவருக்கு லஞ்சம் கொடுத்து மதிப்பீட்டு அறிக்கை பெற எனக்கு விருப்பம் இல்லை. இருந்தாலும் அப்போது அவரிடம் இப்ப பணம் இல்ல சார் பணத்தோடு வந்து தங்களை பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் 4, 5 நாட்களாக எனக்கு உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது. நேற்று 16.05.2022 மதியம்தான் எனக்கு உடல்நிலை சரியானது. என்னிடம் லஞ்சம் கேட்ட மேற்படி உதவி பொறியாளர் திரு.திருமாறன் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி தங்களை கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம்) சுப்பிரமணியன் 17.05.2022.

Sir, Received the complaint on 17.05.2022 at 08.00 hrs the genuiness of the complainant was verified through sources and found to be genuine. The intergrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found Prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted, the matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Sivagangai, Vigilance and Anti-Corruption Unit Crime No.01/2022, U/s 7 of Prevention of Corruption Act 1988 (as amended in) Act 16 of 2018 on 17.05.2022 at 09.00 hrs and took up for Investigation. (Sd) M.Kumaravel 17.05.2022 Inspector of Police, Vigilance and Anti-Corruption, Sivagangai Detachment.

The Original FIR along with original complaint is submitted to the Hon'ble Special Judge for PC Act cases, Sivagangai and the copies submitted to the concerned officers.